இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 04-07-2024

# ராகுல் பேசியதில் என்ன தவறு ?

‘இந்தியா’ கூட்டணியின் அரசியல் வெற்றியானது தினந்தோறும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது!

பத்தாண்டு கால பா.ஜ.க. வரலாற்றில் ஒரு எதிர்க்கட்சித் தலைவர் பேச்சை பிரதமர் உட்கார்ந்து பொறுமையாகக் கேட்டுள்ளார். அமைச்சர்கள் அனைவரும் வரிசையாக எழுந்து பதில் சொல்லி இருக்கிறார்கள். பிரதமர் பேசுவதைக் கேட்கும் அதே உன்னிப்பு உணர்வுடன் பா.ஜ.க. எம்.பி.க்களும் ராகுல் உரையைக் கேட்டார்கள். வரலாற்றில் இல்லாத வகையில் இன்னொருவர் பேச்சை மணிக்கணக்கில் உட்கார்ந்து பிரதமர் மோடி கேட்கும் காட்சியைப் பார்த்தோம். இன்னொருவருக்கு மோடி பதில் சொன்னதையும் பார்த்தோம்.

**இந்திய நாடாளுமன்ற வரலாற்றில் எதிர்க்கட்சித் தலைவர் பேச்சுக்கு பிரதமர்கள் பதில் அளிப்பதைப் பார்த்துள்ளோம். ஆனால் பத்தாண்டு கால பா.ஜ.க. ஆட்சியில் அவை அனைத்தும் பழங்கனவாக மாற்றப்பட்டு விட்டன. அதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு ஜனநாயகப் பூங்காற்று மெல்ல வீசியதை ராகுல் உரையாற்றிய நாளன்று இந்தியா உணர்ந்தது. அதனை உணர்த்தியதுதான் ‘இந்தியா’ கூட்டணியின் அரசியல் வெற்றியாகும்.**

மிகப்பலவீனமான ஒன்றிய அரசாங்கத்தை நகர்த்திச் செல்லும் பிரதமர்தான் நான் என்பதை அன்றைய தினம் மோடி உணர்ந்திருக்கக் கூடும். சிலரின் தயவால்தான் நாம் பிரதமராக உட்கார்ந்திருக்கிறோம் என்பதையும் அவர் உணர்ந்திருக்கக் கூடும். ஆளும் கட்சியும் – எதிர்க்கட்சியும் ஏறத்தாழ சம பலத்துடன் உட்கார்ந்திருந்த நாடாளுமன்றத்தை அன்றைய தினம் பார்த்தோம். இதுதான் ‘இந்தியா’ கூட்டணியின் அரசியல் வெற்றியாகும்.

**‘ஏன் தோற்றவர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள்?’ என்று பிரதமர் மோடி முன்பு கேட்டார். ‘உங்களால் நினைத்ததைச் செய்ய முடியாது அல்லவா, அதனால்தான்’** என்பதை இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் மூலமாக அன்றைய தினம் உணர்ந்திருப்பார் பிரதமர். உணர்ந்திருக்க வேண்டும் பிரதமர்.

அனைத்து மதக் கடவுள்களின் படங்களையும் ராகுல் எடுத்து வந்திருந்து நாடாளுமன்றத்தில் காட்டினார். அனைத்து மதங்களும் அன்பைத் தான் போதிக்கின்றன. குறிப்பாக இந்துக் கடவுள்களும் அன்பைத் தான் அதிகம் போதிக்கின்றன. ‘ஆனால் தங்களை இந்துக்கள் என்று அழைத்துக் கொள்பவர்கள் எந்த நேரமும் வன்முறையையும் வெறுப்புணர்வையும் விதைப்பது ஏன்?’ என்று நேருக்கு நேராகக் கேட்டார் ராகுல் காந்தி.

இதுபோன்ற கேள்விகளுக்குப் பதில் சொல்லி பழக்கமில்லை பா.ஜ.க.வுக்கு. அதனால் வழக்கம் போல திசை திருப்பல் பாணியைக் கையில் எடுத்தார்கள். பா.ஜ.க.வைப் பார்த்து கேள்வி கேட்டால், ‘இந்துவைக் கொச்சைப்படுத்தி விட்டார்கள்’, ‘இந்திய நாட்டைக் கொச்சைப்படுத்தி விட்டார்கள்’ என்று திசை திருப்புவது பா.ஜ.க.வின் வாட்ஸ் அப் யுனிவர்சிட்டியின் வேலை ஆகும். இதன் வைஸ் சான்சிலரே மோடிதான் என்பது அன்றைய தினம் அவர் சொன்ன பதில் மூலமாகத் தெரிந்தது.

ராகுல் காந்தி, சுற்றி வளைத்துச் சொல்லவில்லை. நேரடியாகத் தான் சொன்னார். ‘இந்து மதம் அன்பைத் தான் போதிக்கிறது, இந்துக்களுக்காக நிற்பதாகச் சொல்பவர்கள் எதற்காக வன்முறையை விதைக்கிறீர்கள்’ என்று தான் கேட்டார். உடனே பிரதமர், ‘ஒட்டுமொத்த இந்து சமுதாயத்தையும் வன்முறையாளர்கள் என்கிறார்’ என்றார். இப்படி மோடி திசை திருப்பியது கூட நல்லதாக அமைந்தது. அதனால்தான் விரிவான பதிலை ராகுல் சொன்னார்.

“நான் பா.ஜ.க. குறித்து தான் பேசினேன். பா.ஜ.க.வோ ஆர்.எஸ்.எஸ். அமைப்போ அல்லது மோடியோ ஒட்டுமொத்த இந்துக்களின் பிரதிநிதிகள் அல்ல” என்றார் ராகுல். இதற்கு பதில் இல்லை.

“நாங்கள் எங்கே வன்முறையை விதைத்தோம்?” என்று பா.ஜ.க.வினர் கேட்டிருக்க வேண்டும். கேட்டிருந்தால், குஜராத் விவகாரத்தை ராகுல் விளக்கி இருக்கக் கூடும்.

“நாங்கள் எங்கே வெறுப்புணர்வை விதைத்தோம்?” என்று பா.ஜ.க.வினர் கேட்டிருக்க வேண்டும். கேட்டிருந்தால், ‘அதிகப் பிள்ளை பெற்றுக் கொள்பவர்கள்’ முதல் வெறுப்பு வார்த்தைகளின் பட்டியலை ராகுல் சொல்லி இருப்பார்.

“நாங்கள்தான் இந்துக்களின் பிரதிநிதிகள்” என்று பா.ஜ.க. சொல்லி இருக்க வேண்டும். சொல்லி இருந்தால், ‘இந்தியா கூட்டணிக்கு வாக்களித்தவர்களும் இந்துக்கள் தானே” என்று ராகுல் பதில் சொல்லி இருப்பார்.

உச்சநீதிமன்ற நீதிபதிகள் கடந்த ஆண்டு என்ன சொன்னார்கள்?

“வெறுப்புப் பேச்சுகள் பேசாமல் ஒவ்வொருவரும் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். அரசியல்வாதிகள் அரசியலை மதத்துடன் கலக்கும் போது பெரிய பிரச்சினை எழுகிறது. அரசியலையும் மதத்தையும் பிரிக்கும் தருணத்தில் இது முடிவுக்கு வரும். அரசியல்வாதிகள் மதத்தைப் பயன்படுத்துவதை நிறுத்தினால் இதெல்லாம் நின்றுவிடும். மதத்துடன் அரசியலை கலப்பது ஜனநாயகத்திற்கு ஆபத்தானது என்று சமீபத்தில் தீர்ப்பில் கூறியுள்ளோம். டி.வி. மற்றும் பொது இடங்களில் கூட வெறுப்பு பேச்சுகள் அதிகரித்து விட்டன. நாம் எங்கு செல்கிறோம் என்று பார்க்க வேண்டும்? பேச்சுக்களில் கொஞ்சம் கட்டுப்பாடு இருக்க வேண்டாமா? இல்லையெனில் நாம் விரும்பும் இந்தியாவாக உருவாக்க முடியாது. இந்த பேச்சுகளால் நாம் என்ன வகையான இன்பங்களைப் பெறுகிறோம்?

தொடர்ந்து மற்றவர்களை இழிவுபடுத்தும் வகையில் ‘பாகிஸ்தானுக்கு போ’ என்று பேசி வருகின்றனர். ஆனால் பிற சமூகத்தினரும் இந்த நாட்டைத் தேர்வு செய்துள்ளனர். அவர்களும் உங்கள் சகோதர சகோதரிகள் போன்றவர்கள். அவர்களை அவமதித்து நாட்டின் சட்டத்தை மீற உங்களுக்கு உரிமை இருக்கிறதா? நாட்டின் சட்டத்தை மீறினால், அது செங்கற்கள் போல உங்கள் தலையில் விழும். உண்மையான வளர்ச்சி என்பது நமது நாட்டை வல்லரசாக மாற்ற வேண்டும். அதற்கு நாம் சட்டத்தின் ஆட்சியை மதிக்க வேண்டும். அப்போதுதான் நம் நாட்டை சிறந்த வாழும் இடமாக மாற்ற முடியும்” என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் சொன்னார்கள்.

**அதைத்தான் ராகுல் சொல்லி இருக்கிறார் நாடாளுமன்றத்தில். ராகுல் பேசியதில் என்ன தவறு?**

## விக்கிரவாண்டியில் கர்நாடக மாநில கழகத்தினர் வாக்குச் சேகரிப்பு !

விழுப்புரம், ஜூலை 4 - கருநாடக மாநில தி.மு.க. சார்பில் மாநில அமைப்பாளர் ந.இராமசாமி தலைமையில் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மு.இராஜசேகர், எம்.முருகானந்தம், முகமது ஆரிப் மற்றும் தினேஷ் யோகேந்திரா, து.பிரபு, சதீஷ், பிரசன்னா, ஜெ. தனுஷ் ஆகியோர் விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத் தேர்தலில் வாக்குச் சேகரித்தனர்.

தமிழகத்தில் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதியில் - ஜூலை 10.7.2024 தேதியில் நடைபெறும் இடைத் தேர்தலில் இந்திய கூட்டணியில் உச்சம் தொட்ட இமயம் திராவிட மாடல் அரசியல் ஒளி விளக்கு 40 - 40ம் வென்ற மக்கள் போற்றும் தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதியார் அறிவித்துள்ள கழக வேட்பாளர் அன்னியூர் சிவா, வெற்றிக்காக தொகுதி வாக்காளர்கள் வீடு தோறும் அணுகி துண்டு அறிக்கை அளித்து உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து கழக வேட்பாளர் வெற்றிக்கு ஆதரவு கேட்டு வாக்கு சேகரித்தனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (3.7.2024) தலைமைச் செயலகத்தில், செல்வராஜ், இ.கா.ப., (ஓய்வு), வடிவேல், இ.கா.ப., (ஓய்வு), முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கா.முருகவேல்ராஜன், கிருஷ்ணன், ஒன்றிய, மாநில அரசு ஊழியர்கள் சங்கத்தின் ரமேஷ்குமார், அகில இந்திய தேவேந்திர குல வேளாளர் சங்கங்களின் கூட்டமைப்பின் மாரியப்பன், IIS (ஓய்வு), சகோதரர் மறுமலர்ச்சி நலச் சங்கத்தின் வெள்ளாள சேகர் மற்றும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த அபிசுரேஷ், சரவணகுமார், செல்வகுமார், சண்முகசுந்தர், ஈஸ்வரன், அந்தோணிராஜ், சதாசிவம், ஆறுமுகம் ஆகியோர் சந்தித்து, சுதந்திர போராட்ட வீரர் தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் பிறந்த நாளான அக்டோபர் 9ஆம் நாள் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் உள்ளார்.

### சி.வி.எம்.பி.எழிலரசன் தலைமை! அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கண்டன உரை!

# ‘நீட்’ தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி தி.மு.க. மாணவரணி மாபெரும் ஆர்ப்பாட்டம் !

## சென்னை - வள்ளுவர் கோட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் ஒன்றிய அரசுக்கு எதிராக முழக்கம்!

**சென்னை, ஜூலை 4-**

**நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி சென்னையில் தி.மு.க. மாணவரணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டு தங்களது ஆதரவை தெரிவித்தனர்.**

நீட் நுழைவுத் தேர்வால் ஏழை, எளிய மாணவ, மாணவிகள் பாதிக்கப்படுவதாகவும், எனவே அத்தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்றும் தி.மு.க. தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இது தொடர்பாக தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ள மசோதாவுக்கு இதுவரை ஒப்புதல் அளிக்கப்படவில்லை. இதற்கு தி.மு.க. கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. மாணவர் நலன் கருதி நீட் விலக்கு மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் ஒன்றிய அரசுக்கு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். இருப்பினும், இந்த விவகாரத்தில் ஒன்றிய அரசு இறங்கி வருவதாக தெரியவில்லை. இதனை கண்டித்தும், நீட் தேர்வை ரத்து செய்யக் கோரியும் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் அறிவுறுத்தலின்படி தி.மு.க. மாணவரணி சார்பில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தி.மு.க. மாணவரணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, தி.மு.க. மாணவரணி தலைவர் ராஜீவ் காந்தி மற்றும், தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டு, பதாகைகளை ஏந்தி முழக்கமிட்டனர்.



### நீட் தேர்வை ரத்து செய்யும் வரை தி.மு.க.வின் போராட்டம் ஓயாது! ஆர்.எஸ்.பாரதி உறுதி

ஆர்ப்பாட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திமுக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி, நீட் தேர்வை ரத்து செய்யும் வரை தி.மு.க. வின் போராட்டம் ஓயாது என்று திட்டவட்டமாக தெரிவித்தார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தி.மு.க. தலைமை நிலையச்செயலாளர் பூச்சி முருகன், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன் மற்றும் இணைச் செயலாளர்கள் பூவை சி.ஜெரால்டு,எஸ்.மோகன், துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், ரா.தமிழரசன், அதலை பி.செந்தில் குமார், கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், கா.பொன்ராஜ், வி.ஜி. கோகுல், திருமதி பூரண சங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி உள்பட மாவட்ட, பகுதி மாணவரணிஅமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்பட மாணவரணி நிர்வாகிகள், மாணவரணியினர், கழக முன்னணித் தோழர்கள் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு கண்டன முழக்கமிட்டனர்.

### விக்கிரவாண்டி தொகுதி வாக்காளர்கள்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியின் திட்டங்களை நினைத்து வாக்களிப்பீர்!

## விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை !

சென்னை, ஜூலை 4-

விக்கிரவாண்டி தொகுதி வாக்காளர்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியின் திட்டங்களை எடைபோட்டு பார்த்து உதயசூரியனுக்கு வாக்களித்து முதல்வரின் ஆக்கப்பூர்வ பணிகளுக்கு ஊக்கமளித்திட வேண்டுமென்று விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

நடைபெறவுள்ள விக்கிரவாண்டி சட்டப்பேரவை இடைத்தேர்தலில்; கடந்த மூன்று ஆண்டு கால திராவிட முன்னேற்ற கழக தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியின் செயல்பாடுகளை, குறிப்பாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நடைமுறைப்படுத்தி வரும் அரும் பணிகளை எடை போட்டு பார்த்து வாக்களிக்க வேண்டியது தொகுதி வாக்காளர்களின் கடமையாகும். தமிழ்நாட்டினுடைய ஆட்சி பொறுப்பை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்ற பொழுது, ஏறத்தாழ ஆறரை லட்சம் கோடிக்கு அதிகமாக கடன் சுமையோடு ஆட்சியை நடத்த வேண்டிய மாபெரும் பொறுப்பு முதல்வருக்கு ஏற்பட்டது. ஆனாலும் தன்னுடைய திறமையாலும், கடும் உழைப்பாலும் எண்ணற்ற அரிய திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருகிறார்.



முதல்வரின் பல்வேறு திட்டங்கள் அண்டை மாநிலங்களால் பின்பற்றக் கூடிய அரிய திட்டங்களாகும். இதன் மூலம் தமிழ்நாட்டினுடைய வளர்ச்சி மற்றும் பொருளாதாரம் முன்னேறி உள்ளதை புள்ளி விவரங்கள் வெளிப்படுத்துகின்றன. தொழில்துறையில் கடைசி நிலையிலிருந்த தமிழ்நாடு இன்றைக்கு முதன்மை இடத்தை அடைந்திருக்கிறது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அரிய முயற்சி மற்றும் அயராத உழைப்பால்

- மாதம் ரூ.1000 உரிமைத் தொகை மகளிருக்கான மகத்தான திட்டம்
- மகளிருக்கான மாபெரும் இலவச பேருந்து திட்டம்
- உயர்கல்வி மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் அரியத் திட்டம்
- பள்ளி மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம்
- கல்வி, சுகாதாரம், தொழில் துறையில் முதலிடத்திற்கு முன்னேற்றம்
- விவசாயத்திற்கு தனி நிதிநிலை அறிக்கை
- தனியார் துறைகளில் இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு
- மக்களைத் தேடி மருத்துவம்
- இல்லம் தேடி கல்வி
- கட்டுமானத்துறையை ஊக்கப்படுத்திட பல்வேறு அறிவிப்புகள்
- பேக்கேஜ் டெண்டர் முறை ஒழிப்பு
- பத்தாண்டு காலம் முடங்கி கிடந்த 18 நல வாரியங்கள் மீண்டும் சீரமைப்பு
- வாரியத்தின் அனைத்து நலத்திட்ட உதவிகளும் இரட்டிப்பாக்கப்பட்டது
- கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொள்ள ரூபாய் 4 லட்சம் இலவச நிதி
- 3 ஆண்டு காலத்தில் 21 இலட்சம் அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு ரூ.1646 கோடி நலத்திட்ட உதவிகள்
- 3 ஆண்டுகளில் 16.6 இலட்சம் தொழிலாளர்கள் புதிதாக பதிவு

இப்படி பிற மாநிலங்களும், பிற நாடுகளும் பாராட்டி பின்பற்றக் கூடிய அளவிற்கு அரிய திட்டங்களை தமிழ்நாட்டுக்கு வழங்கிய திராவிட மாடல் ஆட்சியை விக்கிரவாண்டி தொகுதி வாக்காளப் பெருமக்கள் எடைபோட்டு பார்த்து வாக்களித்திட வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவிற்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து மிகப்பெரிய வெற்றி அளிப்பதன் மூலம் முதல்வரின் ஆக்கப்பூர்வமான பணிக்கு ஒரு அங்கீகாரம் வழங்கி மேலும் அவருடைய பணியை ஊக்கப்படுத்துவதற்கு வாக்காளர்கள் முன் வந்திட வேண்டும்.

விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி மற்றும் கட்டடத் தொழிலாளர்கள் மத்திய சங்கத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் திண்ணைப் பிரச்சாரம் மூலம் தொழிலாளர்களுக்கு இந்த ஆட்சியின் மூலம் கிடைத்துள்ள எண்ணற்ற திட்டங்களை விளக்கி சொல்லி கட்டுமானம் மற்றும் அமைப்புசாராத் தொழிலாளர்களின் வாக்குகளை சிந்தாமல் சிதறாமல் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளருக்கு பெற்றுத் தந்திட வேண்டும். அதற்கான களப் பணியை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுகிறேன்.

இவ்வாறு பொன்குமார் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.